museum of modern
and contemporary art
sri lanka

Quarterly Newsletter #4 - July 2023

‘அந்நியர்’ என்ற தலைப்பில் சந்தேவ் ஹன்டி மற்றும் ஷாமினி பெரேராவினால் எடுத்தாளப்படும் எங்களுடைய புதிய கண்காட்சி 2023ம் ஆண்டு மே 3ம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது! அதன் முதல் இரண்டு மாதங்களில் மட்டும், அர்ஜுன குணரத்ன (பி. 1976), தனுஷ்க மாரசிங்க (பி. 1985), த்னெல்க லியனகே (பி. 1994), ஹேமா ஷிரோனி (பி. 1991), ஹானியா லுதுஃபி (பி. 1989), இமாத் மஜீத் (பி. 1991), இசுரு குமாரசிங்க (பி. 1987), ஜனனி குரே (பி. 1974), கே கே ஸ்ரீநாத் சதுரங்க (பி. 1987), நீனா மங்களநாயகம் (பி. 1980), ரெஜினோல்ட் எஸ். அலோய்ஷியஸ் (பி. 1970), எஸ். எச். சரத் (பி. 1947), ஷியாமா கோல்டன் (பி. 1983), ஸ்டீவன் சம்பியன் (பி. 1959), மற்றும் சுமுதி சுரவீர (பி. 1982) ஆகியோரின் படைப்புகளை ரசிப்பதற்கு 3700 பார்வையாளர்களை இக்கண்காட்சி கவர்ந்துள்ளது.

இச் சிறப்பு கண்காட்சி, அந்நியத்தன்மை எவ்வாறு இப் பதினைந்து சமகால கலைஞர்கள் அவர்களை அந்நியர்களாக, வேற்றோர்களாக மற்றும் விதிகளை மீறுபவர்களாக உணர்வதை பல்வேறு ஊடகங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த கண்காட்சியை நீங்கள் இன்னும் பார்வையிடவில்லை எனின், கொழும்பு 3இல் அமைந்துள்ள க்ரெஸ்கட் புலவாட் இன் தரைத்தளத்தில் உள்ள MMCA இலங்கையின் வளாகத்திற்கு வாருங்கள்.

கடந்த மாதம் ஏட்ரியானோ பெட்ரோசா, அடுத்த வருட ‘la Biennale di Venezia’ (வெனிஸ் பியனில்) இன் எடுத்தாளுநர், 60ம் கண்காட்சி தலைப்பாக–’எங்கும் அந்நியர்கள்’ (‘Foreigners Everywhere’) வெளியிட்டார். இத் தற்செயலான, எதிர்பாராத ஒற்றுமை MMCA இலங்கையின் கண்காட்சியாக ‘அந்நியர்’ உடன் பல ஒற்றுமையான கருத்துக்களை கொண்டிக்கிருக்கின்றது. பெட்ரொசாவின் எடுத்தாளுநர் வெனிஸ் பியனில்

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

அவருடைய எடுத்தாளுமையைப் பற்றி கூறுகையில், "உலகில் எந்தவொரு இடத்திலும் உண்மையாக ஆழ்ந்து யோசித்தால் நாம் அனைவரும் அந்நியர்களாக உணர்வோம்." இத் தருணத்தில் 'அந்நியர்' கண்காட்சியானது ஆட்போரமின் (Artforum) உலகலாவிய கணக்கெடுப்பின் அடிப்படையில் 'கண்டிப்பாக பார்க்கவேண்டிய' கண்காட்சிகளில் ஒன்றாக இலங்கையின் முதல் கண்காட்சியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

'அந்நியர்' கண்காட்சியானது ஏழு நாட்களும் மு.ப 10 முதல் பி.ப 6 வரை, பொது விடுமுறை நாட்களை தவிர்த்து, 22 அக்டோபர் 2023 வரை திறந்திருக்கும். அருங்காட்சியகத்தின் உள்நுழைவு மற்றும் அனைத்து பொது நிகழ்ச்சிகளும் முற்றிலும் இலவசமாகும்.

லண்டனில் பிரீஸ் வாரத்தில் (11-15 ஒக்டோபர்) அக்டோபர் 12ம் அன்று MMCA இலங்கை 'அந்நியர்' கண்காட்சியிலிலுள்ள கலைஞர்களின் திரைப்படங்களை லண்டனிலுள்ள புகைப்பட கேலரியில் காட்சிப்படுத்தப்படவுள்ளதை பகிர்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். காணத்தவறாதீர்கள்!

'அந்நியர்' கண்காட்சியின் கல்வி மற்றும் பொது நிகழ்ச்சிகளின் ஒரு அங்கமாக வழங்கப்படும் உற்சாகமான புதிய பயிற்சிப் பட்டறைகள், கலரி உரையாடல்கள், வாசிப்புக் குழுக்கள் மற்றும் பலவற்றுடன் எங்கள் வழக்கமான நிகழ்ச்சிகள் மீண்டும் வந்துள்ளன. உங்களுக்கு என்ன சுவாரஸ்யமான நிகழ்வுகள் காத்திருக்கின்றன என்பதைப் அறிவதற்கு எங்கள் வலைத்தளம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள எமது சமூக ஊடகங்களின் இணைப்புகளுக்கு செல்லவும்!

'அந்நியர்' கண்காட்சியில், எமது துணை எடுத்தாளுநர் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான பிரமோதா வீரசேகரவின் தலைமையில் மற்றும் வளர்ந்து வரும் வருகை கல்வியாளர்களினாலும் நடாத்தப்படும் பொது நிகழ்ச்சிகளானது மக்களின் மத்தியில் பெரும் வரவேற்ப்பை பெற்றுள்ளது. எமது ஹைலைட்ஸில் புகைப்படங்களை காணலாம்:

எங்களுடைய தலைமை எடுத்தாளுனரான ஷாமினி பெரேரா, உலகளாவிய தெற்கில் ஒரு புதிய அருங்காட்சியகத்தை உருவாக்குவது குறித்து Art In Americaவின் க்லெயா வூன் உடன் பெப்ரவரியில் பேசினார்.

“இவ் அருங்காட்சியகமானது இலங்கையில் கலைகளில் முறையான துறையாக தேர்ந்தெடுக்க முடியுமென்பதை வளர்ந்துவரும் கலைஞர்களுக்கு உணர்த்தும் என்று நம்புகிறேன். இங்கே தற்பொழுது இயங்கும் சமூகம் மென்மேலும் பெரிய மேடையை உருவாக்கி நம் அனைவர்க்கும் எமது திறமையை வெளிக்காட்ட ஓர் மேடையை உருவாக்க நாம் முயற்சிக்கின்றோம்.”

- ஷர்மினி பெரெய்ரா, தலைமை எடுத்தாளுநர், MMCA இலங்கை

இவ்வாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற மிகவும் வெற்றிகரமான புது தில்லி விஜயத்தைத் தொடர்ந்து, எங்கள் நிறுவனப் புரவலர்கள் ஜூன் 23-25 வரை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பல கலைஞர்கள், கலை அமைப்புகள் மற்றும் தொழில் வல்லுநர்களை சந்தித்தனர். இலங்கையில் கட்டடக் கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்ட முதலாவது பல்நோக்கு கலாச்சார அரங்கான யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தையும் சென்று பார்வையிட்டனர். இது Studio TeamArchitraveவின் மதுர ப்ரேமதிலகவால் வடிவமைக்கப்பட்டது.